மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

25.09.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

### போராட்டக்காரர்கள் கைது

## பொலிஸ்மா அதிபரிடம் அவசர அறிக்கை கோரிய மனித உரிமைகள் ஆணைக்குழு

சோசலிச இளைஞர் சங்கம் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தின் போது 83 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபரிடம் அவசர அறிக்கை கோரியுள்ளது. இந்த அறிக்கையை நாளை (26) காலை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் நிலைமையை ஆராய அந்தந்த பொலிஸ் நிலையங்களுக்கு ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு மணித்தியாலத்திற்கு 32 பேர் நாட்டை விட்டு வெளியேறும் நிலை

**முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய**



ஒரு மணித்தியாலத்திற்கு 32 பேர் இலங்கையை விட்டு வெளிநாடு செல்கின்றனர் என தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய நாடு துரிதமாக வீழ்ச்சிப்பாதையில் செல்கின்றது என்பதற்கான அறிகுறி இது எனவும் தெரிவித்துள்ளார். சிலாபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் கடந்த 8 மாதங்களில் 500 மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார். பொறியிலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான புத்திஜீவிகள்

02

## ஆடை தொடர்பான சுற்றறிக்கை நாளை




அரசாங்க உத்தியோகத்தர்கள் பொருத்தமான ஆடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றறிக்கையை வெளியிட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. நாளை (திங்கட்கிழமை) இந்த சுற்றறிக்கையை வெளியிடக்கூடியதாக இருக்கும் என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.எம். எம்.பி.கே.மாயாதுன்னே தெரிவித்தார். பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும் போது சேலை அல்லது அலுவலகத்திற்கு

02

## வரிச்சுமை 42 வீதத்தால் அதிகரிப்பு

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தின் சராசரி வரிச்சுமை 42 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், நடத்தப்பட்ட ஆய்வின்படி ஒரு சராசரி குடும்பத்தின் வரிச்சுமை சுமார் 28,000 ரூபாவாகும். அரசாங்கம் பெருமளவிலான மறைமுக வரிகளை மக்கள் மீது சுமத்துவதால் இந்த நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி நிதியத்திலிருந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

க.பொ.த சாதாரண தர பரீட்சையில் முதற்தடவையிலேயே சித்தியடைந்து க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கமைய புலமைப்பரிசில் பெறுவதற்காக ஒரு கல்வி வலயத்திலிருந்து தகுதியுடைய 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதன்படி நாடு முழுவதுமுள்ள 99 கல்வி வலயங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 2970 மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. புலமைப்பரிசில் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் 5,000/- ரூபா வீதம் ஆக்ககூடியது 24 மாதங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02

## விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு வேலைத்திட்டம் அவசியம்

விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் உடனடியாக தயாரிக்க வேண்டுமென ஆளும் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்திலும் இவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இரண்டு அரச வங்கிகளிலும் தேவையான நிதி வழங்கப்படாததால் நெல் சந்தைப்படுத்தல் சபை நெல் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளதாகவும், இது விவசாயிகளுக்கு பாரிய பிரச்சினையாக உள்ளதாகவும் சபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நெல் கொள்வனவுக்காக இருநூறு கோடி

02

## சீன மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் சந்திப்பு

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் இருதரப்பு சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள இரு அமைச்சர்களுக்கும் இடையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

## திருமலையில் இனந்தெரியாத நிலையில் இரு சடலங்கள் மீட்பு

**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை மாவட்டத்தில் இரு வெவ்வேறு இடங்களில் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாட்டாளிபுரம் பிரதேசத்தில் ஆணொருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன் திருகோணமலை கன்னியா சிறுபிட்டி குளத்தில் மிதந்த நிலையில் ஆணொருவரின் சடலமும் நேற்று (24) மாலை 5.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு சம்பூர் பாட்டாளிபுரத்தில் மீட்கப்பட்ட சடலம் சட்ட வைத்திய பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் கன்னியா சிறுபிட்டி குளத்தில் மிதந்த நிலையில் சடலம் காணப்படுவதுடன் குறித்த சடலம் இதுவரை இனம் காண படாத நிலையில் நிலையில் குறித்த சடலத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 150வது பாடசாலை தினத்தை முன்னிட்டு நடைபவனி நேற்று (24) காலை நடைபெற்ற போது..

## கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் ஐ.நா.வில் முதல் தடவையாக முன்வைப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணிக்கிறது. உதாரணமாக: அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணம், கல்முனை வடக்குச் செயலகத்தில் உள்ள சிவில் நிர்வாகம், 3 தசாப்தங்களாக தமிழ்ச் சமூகங்களுக்குத் தீர்வின்றி, சமத்துவமின்மை மற்றும் முரண்பாடுகளை உருவாக்கியது. இந்தப் பிரச்சினைக்கு ஐ.நா.மாநாட்டில் பதிவு செய்கிறேன். இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன் ஜெனீவா வில் இடம் பெற்ற 51 வது கூட்டத்தொடரில் ஒன்றரை நிமிட உரையின் போது தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்... இலங்கை தொடர்பான ஆரம்ப தீர்மானம், 19/2 (2012 மார்ச்) மற்றும் 22/1 (2013 மார்ச்) இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் வகையில் பெயரிடப்பட்டது. எவ்வாறாயினும், 25/1 (2014 மார்ச்) தீர்மானத்தின் பின்னர், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது என தீர்மானம் மறுபெயரிடப்பட்டது. முழு தீவின் மனித உரிமைகள் ஐக்கிய நாடுகளாலும் இந்த சபையாலும் பேசப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், இனப்படுகொலைக்கான சர்வதேச பொறுப்புக்கூறலானது சபைக்கு வெளியே இலங்கையில் அல்லது ஒரு ஓரத்தில்

02



### கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்

அது நடக்கக்கூடாது. மேலும், இலங்கை அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை புறக்கணிக்கிறது. உதாரணமாக அம்பாறை மாவட்டம், கிழக்கு மாகாணம், கல்முனை வடக்குச் செயலகத்தில் உள்ள சிவில் நிர்வாகம், 3 தசாப்தங்களாக தமிழ்ச் சமூகங்களுக்குத் தீர்வின்றி, சமத்துவமின்மை மற்றும் முரண்பாடுகளை உருவாக்கியது. இந்தப் பிரச்சினையை ஐ.நா.மாநாட்டில் பதிவு செய்கிறேன். பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தாயகத்தில் கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையை எதிர்கொள்கின்றனர். மனித உரிமைகள் பேரவையின் தீர்மான செயல்முறையானது சர்வதேச குற்றங்களின், குறிப்பாக இனப்படுகொலை குற்றங்களின் பொறுப்புக்கூறலில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

### விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு வேலைத்திட்டம் அவசியம்

ரூபாயை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குமாறு இரண்டு அரச வங்கிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை ஐந்து சதம் கூட வழங்கப்படவில்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் உடனடியாக தலையிடுமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவிடம் அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார். ஏற்கனவே இரண்டு மூன்று வாரங்களாக நெல் கொள்வனவு வேலைத்திட்டம் தாமதமாகி வருவதால், அதற்கான பணத்தை உடனடியாக வழங்குவதற்கு அமைச்சர் தலையிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

### ஆடை தொடர்பான

பொருத்தமான ஆடையொன்றை அணியலாம் என்று ஏற்கனவே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சிலர் சுற்றறிக்கையின் முதல் பகுதியை மாத்திரம் பின்பற்றுவதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து

இவ்வருட க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகி க.பொ.த உயர்தர கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதும் இந்த புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படும். இது தொடர்பாக மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு துரிதமாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் நலனுக்காக செயற்பட முடியாதவிடத்து இராஜனாமா செய்ய போவதாக தொழிற் சங்கத்தின் தலைவர் முபாறக் தெரிவிப்பு

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்புக்களை பெற்றுக் கொள்ளும் சுற்றுநிருபங்களை நடைமுறைப்படுத்த முடியாது போனால் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து இராஜனாமா செய்ய போவதாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் தலைவர் ஏ. ஜீ. முபாறக் தெரிவித்துள்ளார். சங்கத்தின் செய்தி பிரிவான "முகாமை" க்கு கருத்து தெரிவிக்கையில் தொழிற்சங்க தலைவர் ஏ.ஜி.முபாரக் குறிப்பிட்டுள்ளதாவது,

வவுணதீவு பிரதேச சபையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்புக்களை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்பட்டு வருவதுடன், வவுணதீவு பிரதேச சபை செயலாளரின் ஊழல் மோசடிகள் யாவும் வெகு விரைவில் வெளியில் கொண்டு வரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2022ம் ஆண்டு கிழக்கு சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் தெரிவு

**ஹஸ்பர்**

47வது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணைவாக நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டு விழாவினுடைய சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை வெற்றிவாகை சூடிக்கொண்டது. கிழக்கு மாகாண விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த 22,23ம் திகதிகளில் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது. ஆரம்பநாள் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து சிறப்பித்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். நேற்றுமுந்தினம் (23) நிறைவு பெற்ற கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தினுடைய பல சாதனைகள் புதுப்பிக்கப்பட்டன.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200க்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர். அதன்படி சிறந்த சுவட்டு நிகழ்ச்சிக்கான வீராங்கனையாக அம்பாறை மாவட்டத்தினுடைய நு.துீ.யு.ே.எதிரிவீர தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன் சிறந்த சுவட்டு நிகழ்ச்சிக்கான வீரராக திருகோணமலை மாவட்டத்தினுடைய யு. ே. ஆ. நாசீக் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த மைதான நிகழ்ச்சிக்கான வீராங்கனையாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. தனுஷ்காவும் சிறந்த மைதான நிகழ்ச்சிக்கான வீரராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சு. ரதுஷனும் இதன்போது தெரிவு செய்யப்பட்டார்கள். கிழக்கு மாகாண விளையாட்டு விழாவினுடைய மிகச் சிறந்த மெய்வல்லுநர் நிகழ்ச்சியின் வீரராக ஈட்டியெரிதல் போட்டியில் கலந்துகொண்ட சு.ரதுஷான் வெற்றிவாகை சூடினார். பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இப்போட்டியின் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் இதன்போது பெற்றுக்கொண்டனர். அதேபோன்று ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இப்போட்டியின் சம்பியனாக திருகோணமலை மாவட்டமும் தட்டிச் சென்றது. கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் 2ம் இடத்தை அம்பாறை மாவட்டமும் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்ற வீரவீராங்கனைகளுக்கு கிழக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சினுடைய செயலாளர் எச். ஈ. எம்.டபிள்யூ . ஜீ. திஸாநாயக்க சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விளையாட்டு விழாவின் ஆரம்பநாள் நிகழ்வுகளில் கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் துஷித பி வணிகசிங்க,திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, கிழக்கு மாகாண அமைச்சினுடைய செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## தியாகதீபம் திலீபனுக்கு சாவகச்சேரியில் அஞ்சலி



**த.சுபேசன்**

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து தன்னுயிரை தியாகம் செய்த திலீபனுக்கு 24.09 சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நகரில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தீயாக தீபத்தின் 35ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பொத்துவிலில் இருந்து நல்லூர் வரையான ஊர்திப் பவனி சாவகச்சேரி நகரை வந்தடைந்த போதே குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் திலீபனுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்த–நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இறைமை,சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தமிழ்த் தேசத்தின் அங்கீகாரம்,இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி,அரசியல் கைதிகளின் விடுதலை,பயங்கரவாத தடைசட்டத்தை நீக்கல்,பௌத்த சிங்கள மயமாக்கலை நிறுத்தல் ஆகிய தமிழர் தரப்புக் கோரிக்கைகளை வலியுறுத்தி "திலீபன் வழியில் வருகிறோம்" எனும் தொனியில் குறித்த ஊர்திப் பவனி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணசபை முறையை வலுப்படுத்த தெற்கு இளைஞர்கள் தயார்



**(ரக்ஸனா**

ஜனநாயக இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் மாகாண சபை முறையை வலுப்படுத்துவதற்காக ஜனநாயக இளைஞர் அமைப்பினர் உள்ளிட்ட இளைஞர் அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து வெளியிட்டு வைத்த சமூகமயப்படுத்தப்பட்ட முன்மொழிவு சனிக்கிழமை(24) ஹம்பாந்தோட்டை கிரீன் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது. மாகாணத்தின் இளைஞர் அமைப்புக்களை பிரதிநிதிப்படுத்திய 200 பேரளவில் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவிலமைப்புக்களின் தலைவர்கள் பலர் பங்குபற்றினர். சிறிலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி திசரு திசாநாயக்க, 43 வது அணியை பிரதிநிதித்துவப்படுத்தி தீக்சன கம்மன்பில் உள்ளிட்டோரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, சிவிலமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தெற்கு இளைஞர்கள் தயாரித்த முன்மொழிவே இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன்போது தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமான மஹிந்த தேசப்பிரியவிற்கு குறித்த முன்மொழிவு வழங்கப்பட்டதனை தொடர்ந்து நிகழ்ச்சி ஆரம்பமானது. ஆளுநர், முதலமைச்சரும் அமைச்சரவையும், மாகாண சபை மற்றும் மத்திய அரசு, சட்ட ஏற்பாடுகள், மாகாண நீதிமன்ற முறைமை, மாகாண நிதி அதிகாரம், மாகாண அரச சேவை, காணி மற்றும் இயற்கை வளங்கள், பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட பல விடையங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

## கல்குடா டைவர்ஸின் ஏற்பாட்டில் இலவச நீச்சல் பயிற்சி



இளைஞர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி முகாம் நேற்று (24) சனிக்கிழமை காயாங்கேணி கடற்கரையில் கல்குடா டைவர்ஸ் அணியின் ஏற்பாட்டில் "ரீலங்கா லைப் காட்" வழிகாட்டலுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர்கள் நீச்சல் பயிற்சியை கற்றுக் கொள்வதற்காக வருகை தந்திருந்தனர். காலை 7:30 தொடக்கம் பி.ப 12.00 மணிவரை இடம்பெற்ற இந்நிகழ்வை அமைப்பின் ஏற்பாட்டாளர்களும் சமூக சேவை உதவியாளர்களுமான ஏ.சீ. எம்.நியாஸ்தீன், தொழிலதிபர் ஹிப்ஜாத், ஜௌபர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். "கல்குடா டைவர்ஸ்" அணியின் விஷேட சுழியோடி அப்துல் மஜீத் ஹலீம் கலந்து கொண்டவர்களுக்கு நீச்சல் பயிற்சிகளை வழங்கியுள்ளார். பங்குபற்றிய அனைவருக்கும் நீச்சல் பயிற்சியின் முக்கியத்துவம், அதனால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டது. அத்தோடு, அண்மைக்காலமாக இப்பிரதேசத்தில் இடம்பெறும் நீர் அனர்த்தங்களின் போது நீரில் மூழ்குபவர்களை மீட்கும் பணிகளையும் கல்குடா டைவர்ஸ் அணியினர் களத்தில் நின்று பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. மேலும், எதிர்வருங்காலங்களில் இன்னும் சிறப்பான முறையில் அதிகமான இளைஞர்களுக்கு நீச்சல் மற்றும் உயிர்காக்கும் பயிற்சிநெறிகளை வழங்கவுள்ளதாகவும் இவ்வமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## இறைவன் குரல் கேட்டு அர்ப்பணித்தவர் நிலையான வாழ்வுக்கு மின்னாமல் முழங்காமல் ஆன்மாவை ஒப்படைத்துள்ளார்

**(வாஸ் கூஞ்ஞ)**

மின்னாமல் முழங்காமல் மன்னார் மறைமாவட்டம் மக்கள் போற்றும் சிறந்த நல்ல ஒரு ஆன்மீகத் தலைவரை இழந்து தவிக்கின்றது. 66 வருடங்கள் நிலையற்ற இந்த பூமியில் வாழ்ந்து நிலையான வாழ்வுக்கு சனிக்கிழமை (24.09.2022) இறைவனால் அழைக்கப்பட்டுள்ளார் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி இராயப்பு அடிகளார். இவரின் திடீர் இழப்பை கேள்வியுற்ற மன்னார் மறைமாவட்டம் தற்பொழுது மிகவும் சோகத்தில் ஆழ்ந்துள்ளது என்பது வெளி வந்துக் கொண்டிருக்கும் அனுதாப செய்திகள் மூலம் புரியக்கூடியதாக இருக்கின்றது.

இவரில் தாங்கள் இறைவனைக் கண்டோம் என தெரிவிக்கின்றனர். காரணம் இவர் யாரையும் நோக்கும்போது முதலில் வெளிவருவது அவரின் புன்முறுவலே வெளியாகும் என்கின்றனர். அதுதான் உண்மையும் கூட.

இவரின் வாழ்வில் உலக விருப்பு வெறுப்புக்கு அப்பால் ஒரு சிறந்த மக்கள் போற்றும் ஒரு ஆன்மீக வழிகாட்டியாகவும் ஆன்மீக வாழ்வை வாழ்ந்து காட்டியவராகவும் திகழ்ந்தவர் என்பது பலராலும் பறையாற்றப்பட்டு வருகின்றது. அமரர் அருட்பணி இராயப்பு அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் முருங்கன் பிச்சைக்குளம் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். இக் கிராமத்தின் முதல் அருட்பணியாளர். அவரின் குடும்பத்திலும் இவரே மூத்தவர். இவர் 1985 இல் மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் மேதகு தோமாஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். இதைத் தொடர்ந்து மன்னார் பேராலயத்தில் உதவி பங்குத் தந்தையாகவும் பின் முருங்கன் . ஆட்காட்டிவெளி ஆகிய இடங்களில் பங்கு தந்தையாகவும் பின் மன்னார் மருதமடு சிறிய குருமடத்தின் அதிபராகவும் இத்துடன் மன்னார் புனித சவேரியார் தேசிய பாடசாலையில் ஆசிரிய பணியையும் நீண்ட காலம் மேற்கொண்டு வந்தார். இத்துடன் மன்னார் மறைமாவட்டத்தின் மரியாயின்சேனையின் ஆன்மீக வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்.

இதைத் தொடர்ந்து இவர் தோட்டவெளி பங்கு தந்தையாகவும் பின் மடு தியான இல்லத்தின் இயக்குனராகவும் மன்னார் சாந்திபுரம் பங்கின் பங்கு தந்தையாகவும் இதைத் தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் பயிற்சி பெற்றுவரும் அருட்சகோதரர்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக செயல்பட்டுக் கொண்டிருந்த நிலையிலேயே அருட்பணியாளர் இராயப்பு மின்னாமல் முழங்காமல் இறைவன்பால் அழைக்கப்பட்டுள்ளார். இறைவனடிசேர்ந்த இராயப்பு அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் பணியாற்றியுள்ளதுடன் கல்விப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுடன் சிறிய குருமட அதிபராகவும் இருந்து குருக்களை உருவாக்கத்திலும் திகழ்ந்த அருட்தந்தையின் பணிவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவருடைய ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்னார் மக்கள் இறை வேண்டுதலுடன் ஒன்றித்து நிற்கின்றனர். இவரின் இறுதி சமய நிகழ்வுகள் மன்னாரில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இறுதிச் சடங்கு பின்னர் தெரிவிக்கப்படும் என மன்னார் ஆயர் இல்ல வட்டாரம் தெரிவித்துள்ளது.

# பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை காலியில் முன்னெடுப்பு





பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய நேற்றைய தினம்(24) பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை காலியில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரிப் பொலிஸாரால் 20இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகள் மீட்பு



**த.சுபேசன்**

சாவகச்சேரிப் பொலிஸாரால் 25ஃ09 ஞாயிற்றுக்கிழமை காலை சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட 20இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகள் மீட்கப்பட்டிருப்பதுடன்–சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். டிப்பர் வாகனத்தில் மரக்குற்றிகளை ஏற்றி அதன் மேல் கற்களை பரவி மரக்குற்றிகளை எடுத்து வந்த போதே சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது மரக்குற்றிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுமார் 20இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை,வீரை மற்றும் பாலை மரக்குற்றிகளே முழங்காவில் பகுதியில் இருந்து யாழ் நோக்கி கொண்டு வந்த போது சாவகச்சேரி நகரில் வைத்து மீட்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மருத்துவம், சமூக சேவை, இன ஐக்கிய செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தவர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனைப் பிராந்தியத்தில் மருத்துவம், சமூக சேவை, சமூக ஒற்றுமை மற்றும் இன ஐக்கிய செயற்பாடுகளில் முன்னின்று உழைத்து வந்த சாய்ந்தமருதின் சிரேஷ்ட வைத்தியர் எம்.ஐ.எம்.ஜெமீல் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது ஷூரா சபையின் தலைவரும் சாய்ந்தமருது ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் முன்னாள் தலைவருமான டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் சனிக்கிழமை (24) தனது 79ஆவது வயதில் காலமானார். அவரது ஜனாஸா அன்றைய தினம் இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில் உலமாக்கள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் என பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்றிருந்தனர். அவரது மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் முதல்வர் றகீப் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது டொக்டர் ஜெமீல் எனும் சிவில் சமூக ஆளுமை முழுக்கிழக்கு மாகாணத்திலும் மட்டுமல்ல தேசிய ரீதியிலும் அறியப்பட்டதொரு நடமாடும் அறிவுப் பெட்டகமாக திகழ்ந்தார். அன்னாரது இழப்பு சமூகப்பரப்பில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில் தான் ஒரு வைத்தியராக இருந்தபோதிலும் தானும் தன் தொழிலும் என்று அத்துறையுடன் மாத்திரம் நின்று விடாமல் சமூக, கலாசார, கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளிலும் இனங்களிடையே ஐக்கியம் மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்பும் பணிகளிலும் இதர சமூகப் பெரியார்களுடன் இணைந்து பணியாற்றி வந்துள்ளார். யுத்த காலங்களிலும் இன முரண்பாடு, கலவர சூழ்நிலைகளிலும் இப்பிராந்தியத்தில் மக்களிடையே சமாதானம், சகவாழ்வை நிலை நிறுத்துவதில் இவரது பங்களிப்பு அளப்பரியதாக இருந்திருக்கிறது. அத்துடன் தனது பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக பெரும் அர்ப்பணிப்புகளை செய்திருக்கிறார். பள்ளிவாசல் தலைமைப் பொறுப்பை வெறுமனே பள்ளிவாசல் பரிபாலனத்துடன் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் ஊரின் அனைத்து விடயங்களையும் கவனிப்பதற்காக பயன்படுத்தியிருந்தார். பள்ளிவாசல் ஊடாக ஊரின் வரலாற்றை தொகுத்து, அதனை நூலுருவாக்கம் செய்து, அடுத்த சந்ததியினருக்கு கையளித்துச் சென்றுள்ளார்.

தொழில் ரீதியாக நாட்டின் பல வைத்தியசாலைகளில் அவர் கடமையாற்றியிருக்கின்ற போதிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட தனது பிராந்திய மக்களுக்கான சாய்ந்தமருது வைத்தியசாலையின் முன்னேற்றத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டிருந்தார். ஒரு காலத்தில் அந்த வைத்தியசாலைதான் சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு மற்றும் கல்முனைக்குடி பிரதேசங்களுக்குப் பொதுவாக மருத்துவ சேவை வழங்கிய ஒரே வைத்தியசாலையாக இருந்திருக்கிறது. அத்துடன் அன்று கல்முனைக்குடியில் ஒரு வைத்தியசாலையின் தேவை உணரப்பட்டபோது அதன் உருவாக்கத்திலும் டொக்டர் ஜெமீல் பாரிய பங்களிப்பை செய்திருந்தார்.

இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் வைத்திய சேவையுடன் சமூக சேவைகளிலும் அவர் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார். அதனால் அனைத்து இன, சமூக, பிரதேச மக்களாலும் டொக்டர் ஜெமீல் பெரிதும் மதிக்கப்பட்டார். ஆக, அன்னாரது நாமம் என்றும் போற்றத்தக்கதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கணித முகாம்



**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜெம் செயத்திட்டத்தின் கீழ் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கணித முகாம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் வண. அருட்சகோதரர் சந்தியாகு செபமாலை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக பிரதிக் கல்வி பணிப்பாளர் ஆ.சஞ்சீவன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து

ஓய்வு பெற்ற கணித பாட உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன், கணித பாட ஆசிரியர் ஆலோசகர் ரி.கிருணிவாசன், மற்றும் கணித பாட ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் சிறப்பு அம்சமாக மாணவர்களின் நான்கு வகையான கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், ஓய்வு பெற்ற கல்முனை வலய கணித பாட உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன், ஆற்றிய சேவைக்காக கல்லூரியால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

# காரைதீவில் 55 வது நூறுநாள் உரிமை போராட்டம்






**(வி.ரி. சகாதேவராஜா)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக நேற்று (24) சனிக்கிழமை காரைதீவில் 55 வது நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது. இதன் கருப்பொருள் “கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” என்பதாகும்.

அம்பாரை மாவட்டத்தில் காரைதீவு பிரதேசத்தில் பவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

1,)நாங்கள் நாட்டை துண்டாக்கவோ தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம் .

2,வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் .

3, 13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகார பரவலாக்கலுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது .அத்தோடு காலாகாலமாக சிங்கள தலைமைத்துவங்கள் பல்வகையான ஒப்பந்தங்களை தமிழ் தலைமைத்துவங்களோடு செய்து கொண்டாலும் இன்றுவரை அவை எங்களுடைய மக்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது .

அந்த அடிப்படையில், மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கின்ற நிகழ்வாக இந்த நிகழ்வு நூறு நாள் செயல்முனைவின் 55நாளான நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவில் இடம்பெற்றது . சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களை சேர்ந்தவர்கள் ,விவசாய அமைப்புகளை சேர்ந்தவர்கள், இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# கல்வி மேம்பாட்டு பேரவையின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(அஷ்ரப் ஏ சமத்)

கல்வி மேம்பாட்டு பேரவையினால் கடந்த 25 வருட காலமாக இயங்கி வரும் கல்வி பயிற்சி நிலையத்தினால் ஆரம்பக் கல்வி . முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் சனிக்கிழமை 24 கொழும்பு 2 ல் உள்ள ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. இந் வைபவத்திற்கு பிரதம அதிதியாக கல்வி இராஜங்க அமைச்சர் அரவிந்தகுமார் கலந்து கொண்டார் அவர் இராஜாங்க கல்வியமைச்சராக பொறுப்பேற்று தலைநகரில் கலந்து கொள்ளும் முதலாவது வைபவமாகும்.

இவ் வைபவம் கல்வி மேம்பாட்டு பேரவையின் ஸ்தாபகத் தலைவர் ஆசிரியர் மருதுார் .ஏ ஹசன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. இவ் வைபவத்தில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், சன்ரைஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.இசட் ஹம்சா, உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத், ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் வைபவத்திற்காக அழைக்கப்பட்ட மாணவ மாணவிகள் போக்குவரத்து பிரச்சினை மற்றும் பஸ் கட்டணம் அதிகரிப்பு கார்ணமாக கிழக்கு வடக்கு மாகாணங்களில் வாழும் முன் பள்ளி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களது சான்றிதழ்கள் அப்பிரதேசத்தில் உள்ள மாவட்ட இணைப்பர்களை கொழும்பு அழைத்து அவர்கள் ஊடாக சகல சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது. இதில் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான டிப்ளோமா, முன் பள்ளி முகாமைத்துவம், மனோத்துவம். போன்ற துறைகளில் பயின்று டிப்ளோமா பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் கல்வி இராஜாங்க் அமைச்சர் அரவிந்தக் குமார் மற்றும் கௌரவ அதிதிகளினால் மாவட்ட இணைப்பாளர்களிடம் கையளிக்க்பபட்டது.



அமரத்துவம் அடைந்தவர்களான மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க முன்னாள் துணைத்தலைவர் அமரர் ஆறுமுகம் இராஜேந்திரம் ( AR ) , மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினர் அமரர் கணபதிப்பிள்ளை நீதிராஜா மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம் நேற்று மட்டக்களப்பு தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வின்போது.

# மனித உரிமைகள் மற்றும் சட்டவாக்கம் தொடர்பான இரண்டுநாள் செயலமர்வு

**வி.சுகிர்தகுமார்**

மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான செயற்திட்டத்தின் ஊடாக இனநல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்வினை அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைவாக மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தினை கட்டியெழுப்புதல் என்னும் தலைப்பில் அரச உத்தியோகத்தர்கள் இளைஞர்கள் மற்றும் சமூக தலைவர்களையும் உள்வாங்கியதான மனித உரிமைகள் மற்றும் சட்டவாக்கம் தொடர்பான இரண்டுநாள் செயலமர்வு நேற்றும் இன்றும் அக்கரைப்பற்று சுவாட் மண்டபத்தில் நடைபெற்றது. பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் மத்திய செயற் குழு தலைவியும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான செல்வி அனுசியா சேனாதிராஜா, இணைப்பாளர் வாணி சைமன் மற்றும் திட்ட இணைப்பாளர் நடராஜா சுமந்தி, திட்ட பொறுப்பாளர் செல்வபதி கங்கேஸ்ரி ஆகியோரின் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் நடாத்தப்பட்ட செயலமர்வில் ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று பொத்துவில் இறக்காமம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த தமிழ்,சிங்கள முஸ்லிம் அரச உத்தியோகத்தர்கள் இளைஞர் யுவதிகள் மற்றும் சமூக தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வின் வளவாளராக சட்டத்தரணி எம். சுதர்சினி கலந்து கொண்டு செயலமர்வை நடாத்தி வைத்தார்.

மனித உரிமைகள் மற்றும் இலங்கையின் சட்டவாக்கம் தொடர்பாகவும் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் அவற்றிற்காக காணக்கூடிய தீர்வுகள் ஆரம்பகாலத்தில் இலங்கையில் இருந்த அரசியலமைப்பு தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு தொடர்பிலும் தெளிவூட்டினார். அத்தோடு மொழி உரிமை அதன் முக்கியத்துவம் மொழி உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்கள் மொழி அறிவின்மையால் இனங்களுக்கிடையிலே ஏற்படுகின்ற தவறான புரிதல்கள் அரச அலுவலங்களில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பாதிக்கும் முறைமைகள் தொடர்பாகவும் மொழி அறிவின் அவசியத்தையும் வலியுறுத்தினார். இச்செயற்பாடுகளானது எதிர்காலத்திலும் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் கலந்து கொண்டவர்கள் தங்களது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

# ஜாவா வாசிகசாலை திறந்து வைப்பு



**ஹஸ்பர்**

கிண்ணியா ஜாவா வாசிகசாலை பெரியாற்றுமுனை பிரதேசத்தின் ஜாவா ஜும்ஆ பள்ளிவாயலில் நேற்று மாலை சனிக்கிழமை (24) திறந்து வைக்கப்பட்டது. கிண்ணியா நகர சபையின் உறுப்பினர் நிசார்தீன் முஹம்மட் அனுசரணையோடு கிண்ணியா நகர சபையின் கீழ் இயங்கும் ஒரு கிளையாக இவ் வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழா நிகழ்வில் கிண்ணியா நகரசபை தவிசாளர் எம்.எம்.நிவாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் இவ் வாசிக சாலை திறந்து வைக்கப்பட்டதுடன் இங்கு பத்திரிகைகள்,நூல்கள் என பலவற்றை படித்து பயன் பெறக்கூடியவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறப்பு அதிதிகளாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி,ஜோர்தான் நாட்டின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் சட்டத்தரணி அப்துல் லாபிர்,அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனின் தலைவர் கஸ்ஸாலி முகம்மட் பாத்திஹ்,நகரசபை உறுப்பினர்களான எம்.ஐ.எம். நிசார்தீன், எம்.எம்.மஹ்தி ஆகியோரோடு மேல்நீதிமன்ற பதிவாளர் எம்.எஸ்.எம்.நியாஸ், முன்னாள் பிரதம நூலகர் சபருள்ளாஹ் கான் என பல முக்கியஸ்த்தர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இவ் விழா ஜாவா ஜு/ம்மா மஸ்ஜிதின் ஏற்பாட்டிலும் பெரியாற்றுமுனை சனசமூக நிலையத்தின் அனுசரணையோடும் இடம் பெற்று இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




### காத்தான்குடியில் இராணுவத்தின் ஏற்பாட்டில்
# சிரமதானப் பணி முன்னெடுப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

காத்தான்குடி கடற்கரையினை சுத்தப்படுத்தும் சிரமதானப் பணியொன்று இராணுவத்தின் ஏற்பாட்டில் நேற்று (24) திகதி முன்னேடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு – குருக்கள்மடம் இராணுவ முகாம் கட்டளை தளபதி மேஜர் YMAB.ahg;gh (Commanding officer of 11th Battalion of Sri Lanka Sinha Regiment) தலைமையில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் இராணுவ வீரர்கள் மற்றும் காத்தான்குடி நகர சபை ஊழியர்கள் பொதுமக்கள் என பலரும் இணைந்து சிரமதான பணியினை மேற்கொண்டிருந்தனர். இதன்போது கடற்கரையில் காணப்பட்ட உக்க கூடிய மற்றும் உக்காத கழிவுகள் பைகளில் சேகரிக்கப்பட்டதுடன், அவற்றை காத்தான்குடி நகர சபை சுத்திகரிப்பு வாகனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன்போது சிறுவர்கள் பயன்படுத்தி வரும் சிறுவர் பூங்காக்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தி வருகின்ற கடற்கரைப் பகுதிகள் என்பன துப்பரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மீராவோடை அல் ஹிதாயா தேசிய பாடசாலைக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனத்தினால் **(ESCO) Team Up** செயற்பாட்டுக்காக இது வழங்கி வைக்கப்பட்டுள்ளது. உபகரணங்களை நிறுவன பிரதிநிதியிடமிருந்து அதிபர் கே.எல். எம்.சபாஹிர், உடற்கல்வி ஆசிரியர் றினோஸ் மற்றும் சிரேஷ்ட ஆசிரியை திருமதி பீ.எம்.. கலீல், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான டபள்யூ. எம். சிபான், வீ.ரீ.றிகாஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# காரைதீவில் கிளவல்லா மீன் மழை



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு கடற்கரையில் நேற்று ஆயிரக்கணக்கான கிளவல்லா மற்றும் வளையா மீன்கள் பிடிபட்டன. கிருஸ்ணபிள்ளை ஜெயவீரா என்ற மீனவருக்குச் சொந்தமான ஆழ் கடல் பாரிய மீன்பிடி படகில் இப்பாரிய பாடு பிடிப்பட்டிருக்கின்றது. ஆழ்கடல் மீன்பிடி படகு உரிமையாளர் ஜெயவீரா கூறுகையில். இன்றைய சமகால பொருளாதார நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் இப்படி பெருந்தொகையான மீன்கள் பிடிபட்டிருப்பது மகிழ்ச்சியானது. சுமார் ஆறாயிரம் கிலோ மீன்கள் பிடிபட்டன மொத்த வியாபாரிகள் கிலோ 550 ரூபாய்க்கு கொள்வனவு செய்தார்கள். கருவாடு போடுபவர்கள் கிலோ 200 ரூபாய்க்கு கொள்வனவு செய்தார்கள். அங்கு கூடியிருந்த பொதுமக்களுக்கும் மீன்கள் விநியோகிக்கப்பட்டன. என்றார். திருவிழா போன்று பொதுமக்களும் கூடிக் காணப்பட்டனர். கடலுக்குள் இருந்து இந்த மீன்களை கரைக்கு கொண்டு வருவதற்கு எட்டு மணித்தியாலங்கள் எடுத்தது .அதாவது காலை 6 மணி இருந்து பிற்பகல் 2 மணி வரைக்கும் மீனவர்கள் மீன்களை கரைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# போசனை நிறைவூட்டலுக்காக பால் வழங்கும் திட்டம் முன்னெடுப்பு



த.சுபேசன்

யாஃபோக்கட்டி அ.த.க பாடசாலையில் போசனை நிறைவூட்டலுக்காக மாணவர்களுக்கு பால் வழங்கும் திட்டம் 21ஃ09 புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன்,போசனை நிறைவூட்டல் திட்ட இணைப்பாளர் கமலேஸ்வரி, சாவகச்சேரி இந்துக் கல்லூ ரியின் நோர்வே கிளை பழைய மாணவர் சங்கப் பொருளாளர் திருமதி சிவயோகம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். லண்டனைச் சேர்ந்த உயர் கல்வி விரிவுரையாளர் அண்ணாமலை மயூரனின் அனுசரணையில் பாடசாலையில் போசனை நிறைவூட்டல் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## களுவாஞ்சிகுடியில் “சமுர்த்தி பசுமை நிற தாயக அறுவடை”

# தேசிய மரநடுகை வேலைத்திட்டம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சமுர்த்தி திணைக்களத்தினால் சமுர்த்தி பசுமை நிற தாயக அறுவடை எனும் தொனிப்பொருளில் தேசிய மரநடுகை தின சுற்றாடல் வேலைத்திட்டம் 2022.09.17ம்திகதிதொடக்கம்2022.09.23ம்திகதி வரை நாடளாவிய ரீதியில் அனுஸ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவில் களுதாவளை – 02, ஈஸ்வரன் ஆலய முன்றலில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி. புவனேஸ்வரி ஜீவகுமார், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமார், மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். ஆனந்தமோகன், கருத்திட்ட முகாமையாளர் திருமதி. சோ.தமிழ்வாணி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர், ஈஸ்வரன் ஆலய நிர்வாகத்தினர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உதவியாளர், பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், சமுர்த்தி பயனாளிகள் என பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# கிண்ணியாவில் உணவற்றோருக்கு உணவு வழங்கும் திட்டம்




ஹஸ்பர்

பொருளாதார நெருக்கடியினால் நாள் ஒன்றுக்கு உணவை பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் 45 ஆவது நாளை முன்னிட்டு இன்று (25) விழிப்புணர்வு ஊர்வலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வானது இன்று காலை 11மணிக்கு கிண்ணியா குட்டிக்கராச்சி சந்தியில் இடம் பெற்றது. கிண்ணியா இளைஞர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உணவளிக்கும் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பலர் பெற்றுக் கொண்டனர். கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி,உலமா சபையின் பிரதிநிதி உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏழை மக்களுக்கு மற்றவர்களும் உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் கிண்ணியா குட்டிக்கராச்சி சந்தியில் இருந்து கொழும்பு திருகோணமலை பிரதான வீதியூடாக சென்று மீண்டும் உணவளிக்கும் இடத்தை வந்தடைந்தது. இதில் ஒரு நாள் உணவை பெற்றுக் கொள்ள முடியாத பலர் அரிசி,உருளைக் கிழங்கு,பெரியவெங்காயம், தேங்காய் முதலானவற்றை பிரதேச செயலாளர் மற்றும் ஏற்பாட்டாளர்களிடமிருந்து மக்கள் பெற்றுக் கொண்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் இனநல்லிணக்கத்தை வலுப்படுத்தியவர் மறைந்த டாக்டர் ஜெமீல்



(காரைதீவு நிருபர் )

இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கும்,அம்பாறை மாவட்ட இனநல்லிணக்கத்திற்கும் பலவருடங்களாக சீரிய பணியாற்றிவந்த எமது அமைப்பின் தலைவர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீலின் மறைவு பாரிய வெற்றிடத்தைத்தோற்றுவித்துள்ளது. அன்னார் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாறு சமாதானத்திற்கான சமயயங்களின் இலங்கைப் பேரவையின் (**SLCRP**) அம்பாறைமாவட்டக்கிளையும், அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனமும் (ஐசுகுயுனு)இணைந்து அனுதாபச்செய்தியை வெளியிட்டுள்ளன.

அமைப்புகளின் சார்பில் அதன் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா(**ADE**) விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேலும் குறிப்பிடப்படுள்ளதாவது. டாக்டர் ஜமீல் அவர்கள் பல்லின சமூகம் வாழும் எமது பிராந்தியத்தில் ஒரு சமாதான விரும்பியாக செயற்பட்டவர். அதனால் தான் அவர்சமாதானத்திற்கான சமயயங்களின் இலங்கைப்பேரவையின் அம்பாறைமாவட்டக்கிளையினதும், அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனத்தினதும் தலைவராக இருந்து செயற்பட்டவர். சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜ/ம்மா பள்ளிவாசல் தலைவராக இருந்து பல்வேறு மதம்சார் முன்னேற்றமான செயற்பாடுகளை மேற்கொண்டவர். அதைவேளை ஏனைய மதங்களை மதித்தவர். சாய்ந்தமருது வரலாற்று நூலை வெளியிடுவதில் முன்னின்று செயற்பட்டவர்.

அத்தோடு சுனாமிக்குப் பின்னரான மீள் கட்டுமான பணிகளை திட்டமிடுவதில் முன்னின்று செயற்பட்டவர். தனது வைத்தியத் துறையில் மக்கள் மத்தியில் சிறப்பான வைத்திய சேவையை மேற்கொண்டவர். சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பம் முதல் தனது இறுதிக்காலம் வரை அக்கறையுடன் செயற்பட்டவர். சாய்நதமருது பிரதேசத்தில் சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றியத்தை உருவாக்கி அதன் தலைவராக இருந்து செயல்பட்டதோடு ஓய்வு நிலை ஊழியர்களின் முதுமை சம்பந்தமாக அக்கறையுடன் செயற்பட்டவர்.

சமாதானத்திற்காக நீண்டகாலம் பணியாற்றிய அவர் பழகுவதற்கு இனிமையானவர்.நல்லகுணம் படைத்த கல்விமான்.அடக்கமானவர்.மும்மொழி தேர்ச்சி பெற்றவர்.

எமது சங்க நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். சங்கத்தின் ஆணிவேராகத்திகழ்ந்தவர். சர்வதேசநாடுகளுடன் தொடர்புள்ளவர். குறிப்பாக நாம் சிறுபான்மையினர் தேசிய அமர்வுக்கு செல்லும்போது அம்பாறை மாவட்டக்கிளையை அனைவரும் எப்போதும் புகழ்ந்துபேச வைத்த பெருமை டாக்டர் ஜெமீலையே சாரும். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ,திருகோணமலை, பேருவளை ,தர்காநகர் உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு சென்று சமயத்தலைவர்களை சந்திப்பதற்கு எமது குழுவின் மீகாமனாக இருந்து தலைமைத்துவம் வழங்கியவர்.

இறுதியாக கதிர்காமத்தில் நடந்த எமதுவருடாந்தபொதுக்கூட்டத்தில் தனதுவேலைப்பழு உடல் நிலை காரணமாக தலைவர் பதவியிலிருந்து ஒதுங்குவதாகத் தெரிவித்தபோது எவரும் அதில் உடன்படவில்லை. அந்தளவிற்கு பலரது மனங்களிலும் அவர் நீங்காத இடத்தைப்பிடித்திருந்தார்.

அப்படிப்பட்ட பண்புள்ள ஒரு தலைவரை இனிநாம் காண்போமா என்பது சந்தேகமே. இறுதியாக அவரது சுயசரிதையை தானே எழுதி ஊரின் வரலாற்றையும் இணைத்து காத்திரமான கனதியான தடங்களின் நினைவுகள் என்ற நூலை தனது இல்லத்தில் வெளியிட்டார். பெரியார்களை மதிக்காத சமூகத்தில் பெரியார்கள் உருவாக மாட்டார்கள் என்று தொடங்கிய ஆழமான அணிந்துரையை அந்நூலில் அவர் பதிவிட்டு இருந்தார்.

அந்த நூலை அவர் எளிமையாக அவரது வீட்டிலேயே வெளியிட்டார். எனது மதிப்புரையும் அங்கே இடம்பெற்றமையை பாக்கியமாக கருதுகின்றேன். என்றும் என்னை ஆழமாக நேசித்த ஒரு தூ ய கனவானை இழந்தது எனக்கும் பேரிழப்புதான். அன்னாரின் மறைவு இப்பிரதேச அனைத்து மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இத்தருணத்தில் அம்பாறை மாவட்ட மூவினமக்கள்சார்பாகவும் எமது அமைப்புக்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

# வவுணதீவில் தேசிய மரநடுகை வேலைத் திட்டம்



சமுர்த்தி திணைக்களத்தினால் “சமுர்த்தி பசுமை நிற தாயக அறுவடை” எனும் தொனிப்பொருளில் தேசிய மரநடுகை தின சுற்றாடல் வேலைத்திட்டம் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வவுணதீவு பொது மயானத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டதுடன் பிரதேச செயலகம், சமுர்த்தி வங்கிகள் போன்றவற்றில் பயன்தரும் பழ மரக்கன்றுகளும் நடப்பட்டது. பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வுகளில், உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன், சமுர்த்தி முகாமைத்துவப்பணிப்பாளர் கே.தங்கத்துரை, வங்கி வலய முகாமையாளர் ஏ.பிரியதர்சினி, சமுதாய அமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.